(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.21/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW- 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | இசக்கியப்பன் |
| த/பெ | : | நயினார் |
| கிராமம் | : | சீலாத்திகுளம் |
| வட்டம் | : | இராதாபுரம் |
| வயது | : | 29 |

**( 2 வது எதிரி ஆஜர் 1,3 எதிரிகள் ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

2024 ம் ஆண்டு ஜீன் திங்கள் 25 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)-ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :-**

1) நான் தற்போது சீலாத்திகுளத்தில் வசித்து வருகிறேன். நான் இசை கலைஞராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் 2 வது எதிரியை தெரியும். வழக்கின் 1,3 எதிரிகளை தெரியும். 03-07-2017 ம் அன்று நான் மாலை 07.30 மணிக்கு சீலாத்திகுளம் சந்தன மாரியம்மன் கோவிலில் நான் பூஜைகள் முடித்து விட்டு கோவில் கொடைவிழாவின் கணக்கு வழக்குகளை பார்த்துவிட்ட ஊர் தலைவர் வேணுகோபால் நடையை அடைக்கும் படி கூறினார். நான் கோவில் நடையை அடைத்தேன்.

2) அப்போது ஆஜர் 2 வது எதிரியும், அவரது அண்ணன் முருகனும் நீ எப்படி கோவில் நடையை சாத்தலாம் என்று கையால் எனது கன்னத்தில மாறி மாறி அடித்தார்கள். இசக்கியப்பன் என்னை புண்ட மவனே தேவடியா மவனே நீ எப்படி கோவிலை சாத்தலாம் என்று அசிங்கமாக ஏசினார்கள். எதிரிகள் மூவரும் ஆஜர் எதிரி எனது இரண்டு கையையும் பின்னால் இருந்து சேர்த்து பிடித்து கொண்டார். மற்ற எதிரிகள் கையால் என்னை மாறி மாறி கன்னத்தில் அடித்தார்கள். மேற்படி வழக்கு சம்பவத்தை சுரேஷ், முருகன், மற்றும் கோவில் இருந்த அனைவரும் பார்த்தார்கள்.

3) நான் இராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலுதவி சிசிச்சை செய்துவிட்டு என்னை மேல் சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அழைத்து வைத்தார்கள். நான் இராதாபுரம் அரசு மருத்துவமனையில் சிசிச்சையில் இருந்த போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கி சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் வழக்கு சம்பந்தமாக நான் கொடுத்ததுதான. **புகார் வாக்குமூலம். அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) சந்தன மாரியம்மன் கோவில் ஊர் பொது கோவில் என்றால் சரிதான். அது சீலாத்திகுளம் அரிஜன மக்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் வழக்கு சம்பவ காலத்தில் 250 வரிதாரர்கள் இருந்து இருப்பார்கள். வழக்கு எதிரிகளுக்கு மேற்படி கோவிலில் வரி உண்டு என்றால் சரிதான். கோவில் கொடைவிழா வரவு செலவு கணக்கை கேட்க எதிரிகளுக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். சம்பவ காலத்தில் கோவில் பூஜாரியாக இருந்தீர்கள் என்றால் சரிதான்.

2) வேணுகோபால் ஊர் தலைவராக இருந்தார். சம்பவத்தின் போது கும்பிகுளம் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். கும்பிகுளம் பகுதியில் அவருக்கு செல்வாக்கு உண்டு என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது.அவர் எனது ஊரைச் சார்ந்தவர். எனது உறவினர் கிடையாது. சுரேஷ் எனது அக்காவின் கணவர் ஆவார். அவரது தங்கையை நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது இரவு சுமார் 07.30 மணி இருக்கும். அந்த சமயத்தில் வரவு செலவு கணக்கு பார்த்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். வரிதாரர்கள் அனைவரும் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான்.

3) வரிதாரர்கள் கோவிலுக்கு உள்ளேயும், வெளியேயும் இருந்தார்கள். ஊர் தலைவர் வேணுகோபால் அப்போது தான் கதவை பூட்ட சொன்னார் என்றால் சரிதான். கணக்கு வழக்கு பார்த்து அனைவரும் சென்ற பிறகுதான் பூட்ட சென்றேன். கணக்கு வழக்கில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி கணக்கு வழக்கு பற்றி பிரச்சனை செய்தாரா என்ற விபரம் உங்களுக்கு தெரியாதா என்றால் சரிதான்.போலீஸ் விசாரணையில் கணக்கு வழக்கு பார்க்கும் போது எதிரிகள் பிரச்சனை செய்வதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எதிரிகள் கணக்கு வழக்கு பார்க்கும் போது உங்களிடம் பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான்.

4) எதிரிக்கும் உங்களுக்கும் முன்விரோதம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் கோவிலுக்கு வெளியே வைத்து நடைபெற்றது. வரிதாரர்கள் அனைவரும் வழக்கு சம்பவம் நடைபெற்ற போது இருந்தார்கள் என்றால் சரிதான். வரிதாரர்கள் எதிரிகளை சத்தம் போட்டார்களா என்றால் சத்தம் போட்டார்கள். ஆஜர் எதிரி முருகன் அரசு பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவம் இடம் சீலாத்திகுளத்திலிருந்து இராதாபுரம் மருத்துவமனை சுமார் 7 கிலோ மீட்டர் துரத்தில் உள்ளது. இருசக்கர வாகத்தில் 15 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான்.

5) சம்பவதன்று இரவு 09.00 மணிக்கு நான் மருத்துவமனை சென்றேன். சம்பவ இடத்தில் இருந்த கிளம்பி இருந்தால் மருத்துவமனைக்கு 08.09 மணிக்கு தான் கிளம்பினேன். சம்பவம் நடந்த பின் கோவில் பொருட்களை எடுத்துவிட்டு

அதன்பின்பு வந்தேன். போலீசார் சம்பவதன்று இரவு வந்து விசாரணை செய்தார்கள் எப்போது வந்தார்கள் என்று தற்போது எனக்கு நினைவில்லை. போலீசார் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதை நீங்கள் வாசித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். வாசித்து காண்பித்தார்கள். சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனைக்கு நான் எனத தயார், மற்றம் அக்காவின் கணவர் ஆகியோர் சென்றோம்.

6) ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு மறுநாள் காலை 08.00 மணிக்கு ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு போலீசார் வந்து விசாரணை செய்யவில்லை. இராதாபுரம் மருத்துவமனையில் இருக்கும் போது மட்டும் தான் போலீசார் விசாரணை செய்தார்கள். அதன்பின்பு விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் எதிரிகள் உங்களை அசிங்கமாக ஏசவில்லை என்றாலும், கையால் தாக்கி காயம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் உங்கள் ஊர் தலைவர் வேணுகோபால் ஆகியோருக்கு ஏற்பட்ட பிரச்சனை காரணமாகவும் கணக்கு வழக்கு ஒப்படைக்காதலும், அவருக்கு ஆதரவாக நீங்கள் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு கிடையாது என்றாலும் சரியல்ல.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.